சுருக்கம்

அடிப்படை விதிகள் – அரசால் ஏற்பளிக்கப்பட்ட தனியார் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் அரசுப்பணியாளர்கள் – 60 நாட்களுக்கு மிகைப்பட்ட காலத்திற்கு மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு – மருத்துவக் குழு பரிந்துரையின்றி விடுப்பு ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (அவி.III) துறை

அரசு ஆணை (நிலை) எண்: 148 நாள்:14.9.2006

படிக்கப்பட்டவை:

1) அரசு ஆணை (நிலை) எண்.400, நிதித்துறை, நாள் 29.8.2000.
2) அரசு ஆணை (நிலை) எண்.377, நிதித்துறை, நாள் 13.10.2005.
3) முதன்மை ஆணையர் (ம) வருவாய் நிருவாக் ஆணையர் கடித எண்.பணி 1(3)/47993/2000, நாள் 7.3.2001
4) மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரின் நே.மு.கடித எண்.81686/ICII/3/2002, நாள் 18.6.2004.

*****

ஆணை:

நடைமுறையில் உள்ள அடிப்படை விதி 74–ன் விதி 9–A (i) (a)ன் படி 60 நாட்களுக்கு மேல் மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு மேற்கொள்ளும் அரசுப் பணியாளர்களது மருத்துவ விடுப்பிற்கு ஒப்பளிப்பு வழங்குமுன் மருத்துவக் குழுவின் பரிந்துரை கட்டாயமாக பெறப்படவேண்டும். அடிப்படை விதி 74–ன் 9–A (i) (a)ன்படி "அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் அரசுப் பணியாளர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் மீதான ஈட்டா விடுப்பு வழங்குவதற்கு மருத்துவக் குழு பரிந்துரைக்கு அனுப்ப தேவையில்லை. அடிப்படை விதி 74–ன் விதி 9-A(vii)ன்படி தனியார் மருத்துவ மனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட அரசுப் பணியாளர்கள் அறுபது நாட்களுக்கு மிகைப்பட்ட மருத்துவச் சான்றிதழ் மீதான ஈட்டாவிடுப்பு விண்ணப்பிக்கும்போது அத்தகைய அரசுப் பணியாளர்களை மருத்துவக் குழு முன் பரிசோதனைக்காகவும் மருத்துவச் சான்றிதழ் வழங்குவதற்காகவும் மருத்துவக் குழுவிற்கு அனுப்பபட வேண்டும்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில், தனித் தன்மையுடைய அறுவை சிகிச்சை / மருத்துவச் சிகிச்சை (Specialised advanced surgery / treatment ) மற்றும் சில குறிப்பிட்ட நோய்களுக்கு சிறப்பிடம் பெற்றுள்ள தனியார் மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சை / மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் அரசுப் பணியாளர்கள் மருத்துவ நிதி சலுகை பெற ஏதுவாக தனியார் மருத்துவ மனைகளை பட்டியலிட்டு அரசு ஏற்பளித்துள்ளது. பார்வை இரண்டினில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கூடுதலாக மேலும் சில தனியார் மருத்துவ மனைகளுக்கு ஏற்பளித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

3. பெரும்பான்மையான அரசுப் பணியாளர்கள் அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனையில் தனித்தன்மையுடைய அறுவை சிகிச்சை / மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ள உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவ்வாறு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அரசுப் பணியாளர்கள் மருத்துவச் சான்றிதழ் மீதான ஈட்டா விடுப்பு 60 நாட்களுக்கு மிகைப்பட்டு எடுக்கும் நிலை இருப்பதால் அவர்களை மருத்துவக் குழுவின் பரிந்துரை பெற அனுப்பாமல் மருத்துவச் சான்றிதழ் மீதான ஈட்டாவிடுப்பு வழங்குவதால் விடுப்பு முறைப்படுத்த ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கலாம் எனவும், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

சிகிச்சை பெறும் அரசுப் பணியாளர்களுக்கு, மருத்துவச் சான்றிதழின் பேரில் ஈட்டா விடுப்பு வழங்குவதற்கு அவர்களை மருத்துவக் குழுப்பரிந்துரைக்கு அனுப்பத் தேவையில்லை என அரசு ஆணையிடுகிறது. மேலும் இவ்விதியினை கீழ்கண்ட வரைமுறைகளுடன் அனுமதிக்க வேண்டும் எனவும் ஆணையிடுகிறது:-

i) அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப்பெறும் அரசுப் பணியாளர் அம்மருத்துவமனையில் உள்ள மருத்துவ அதிகாரியிடமிருந்து மருத்துவச் சான்றிதழ் மருத்துவ அறிக்கையுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

ii) அரசுப் பணியாளர்கள் அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெறுவதற்காக மட்டும் அனுமதிக்கப்பட வேண்டுமேயன்றி நோய் கண்டறிவதற்காக அனுமதிக்கக் கூடாது. விடுப்பு வழங்கும் அலுவலர், அரசுப் பணியாளர் சமர்ப்பித்துள்ள மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் விடுப்பு அளிக்கலாம். மருத்துவச் சான்றிதழின் உண்மைத்தன்மையில் ஏதேனும் ஐயம் ஏற்பட்டால் அப்பணியாளரை வல்லுநர் குழு / மருத்துவக் குழு முன் எல்லா அறிக்கையுடன் இரண்டாவது கருத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

5. அடிப்படை விதிகளுக்கான உரிய திருத்தங்கள் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (அவி.IV) துறையினால் தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்
சிறப்பு ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளர்

பெறுநர்
ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்கள், சென்னை – 9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 9.
அனைத்து துறைத் தலைவர்கள்/ மாவட்ட ஆட்சியர்கள்/
மாவட்ட நீதிபதிகள்/குற்றவியல் தலைமை நீதிபதிகள்.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை – 104.
முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை–6
பதிவாளர், தமிழ்நாடு அரசு நிர்வாக தீர்ப்பாயம், சென்னை–104.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதியமைச்சரின் தனிச் செயலர், சென்னை–9
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் தனிச்செயலர், சென்னை–9.
தலைமைச்செயலரின் தனிச்செயலர், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகசீர்திருத்தத் (அவி.IV) துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்து பிரிவுகள் சென்னை–9.
இ.கோ./ உதிரி நகல்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

<u>Roc.No.6577/06HCdt 6.11.06</u> Office of the Chief Judicial Magistrat
Madurai.
பிரிவு அலுவலர் 14.9.06.
Dated: 7.11.2006.

Copy communicated to ACJm and all Judicial Magistrate of Madurai District.

D.No. 3966
20.11.06.

Chief Judicial Magistrate,
MADURAI

R.O.C.No.5094/2006/C4

P.Dis.No. 98/2005.

Copy communicated for information and taking necessary action.

HIGH COURT, MADRAS
DATED: 11.10.2006
TO

Sub Asst. Registrar(A/c)

1.The Registrar General, High Court, Madras